**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 30 August 2016

# தனியார் வீட்டு விலை ஜூலையில் 0.2% கூடியது

சிங்கப்பூரில் கட்டி முடிக்கப் பட்ட தனியார் அடுக்குமாடி வீடுகள், கூட்டுரிமை வீடுகளின் விலை ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூலையில் 0.2% கூடியது.

சிங்கப்பூரின் குடியிருப்புச் சொத்து விலை அட்டவணை நேற்று இதனை தெரிவித்தது. ஜூன் மாதம் ஒட்டுமொத்த விலை மே மாதத்தைவிட 0.7% அதிகரித்தது. ஆனால் ஜூலையில் விலை இந்த அளவுக்கு ஏறவில்லை.

சிங்கப்பூர் குடியிருப்புச் சொத்து விலை அட்ட வணையை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் நிலச் சொத்து ஆய்வுக் கழகம் தொகுத்து உருவாக்குகிறது.

மத்திய வட்டாரத்தில் அமைந்துள்ள வீடுகளின் விலை 0.7% கூடியிருக்கிறது. அந்த வட்டாரத்துக்கு வெளியே உள்ள வீடுகளின் விலை 0.2%தான் கூடியது.

506 சதுரஅடி வரை தரைப்பரப்பைக் கொண்ட சிறிய வீடுகளின் விலையில் ஜூலை மாதம் மாற்றமில்லை.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.